# திண்ணை பயிற்சிப்பட்டறை - தேனி

# TNPSC GROUP IV - 2022

Test - 2 Tamil
Part B

Mobile: 93614 82208, 99409 70325 Email id: thinnaimail@gmail.com

## திண்ணை உறுதிமொழி

இரக்கமும் கருணையும் இருகண்களாகட்டும்!

இதழ்கள் இரண்டிலும் புன்னகை மலரட்டும்!

உழைப்பும், உறுதியும் இருதோள்களாகட்டும்!

நேர்மை ஒன்றையே நெஞ்சம் தாங்கட்டும்!

இடதும் வலதும் இணைந்த கரங்களாகட்டும்!

இதயம் என்றும் அன்பால் துடிக்கட்டும்!

தடைகளைத் தாண்டி கால்கள் ஓடட்டும்!

கொட்டும் வியர்வையே மூலதனமாகட்டும்!

சாதி மதம் பேதம் ஒழிப்போம்!

பதவி பணம் தரும் கர்வம் தவிர்ப்போம்!

லட்சியம் விதைத்து வெற்றியை அடைந்து!

லஞ்சம் தவிர்த்து நெஞ்சை நிமிர்த்து!

அறத்தின் வழி நின்று மனிதம் போற்று!!

1. எளிய தமிழில் சமூகச் சீர்திருத்தக் கருத்துகளை வலியுறுத்திப் பாடியவர் யார்?

   A) பாரதியார் B) பாரதிதாசன் C) கண்ணதாசன் D) பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம்

   E) விடை தெரியவில்லை

2. இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் கீழ்க்காணும் எந்த வரிசையில் இயற்கையை போற்றுகிறார்?

   A) வெண்ணிலா, ஞாயிறு, இமயமலை B) ஞாயிறு, வெண்ணிலா, இமயமலை

   C) இமயமலை, ஞாயிறு, வெண்ணிலா D) வெண்ணிலா, ஞாயிறு, மழை

   E) விடை தெரியவில்லை

3. “கோட்சுறா எறிந்தெனச் சுருக்கிய

   நரம்பின் முடிமுதிர் பரதவர்” என்னும் அடி இடம்பெற்ற நூல் எது?

   A) கார் நாற்பது B) நற்றிணை C) குறுந்தொகை D) பதிற்றுப்பத்து

   E) விடை தெரியவில்லை

4. கீழ்க்காணும் கூற்றுகளைக் காண்க.

   1. தேசிய விநாயகனார் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்த கவிஞர்.

   2. முப்பத்து நான்கு ஆண்டுகள் பள்ளி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்.

   A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

   E) விடை தெரியவில்லை

5. ‘ஒப்புரவு’ என்பதன் எதிர்ச்சொல் தருக.

   A) மறவாமை B) உதவாமை C) நாடாமை D) இல்லாமை E) விடை தெரியவில்லை

6. மூதுரை குறித்த கூற்றுகளில் தவறானது எது?

   A) மூத்தோர் கூறும் அறிவுரை என்பது மூதுரையின் பொருள்.

   B) சிறந்த ஒழுக்கங்களைக் கூறுவதால் இந்நூல் மூதுரை எனப் பெயர் பெற்றது.

   C) மூதுரையில் முப்பத்தொரு பாடல்கள் உள்ளன.

   D) கற்றோர்க்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு.

   E) விடை தெரியவில்லை

7. “கொள்வதும் மிகை கொளாது

   கொடுப்பதும் குறைபடாது” எனக் கூறும் நூல் எது?

   A) புறநானூறு B) நற்றிணை C) அகநானூறு D) இவற்றில் எதுவுமில்லை

   E) விடை தெரியவில்லை

8. பசியைப் போக்க வந்தது எது?

   A) முத்தேன் B) முக்கனி C) முத்தமிழ் D) இம்மூன்றும் E) விடை தெரியவில்லை

9. ‘தமிழ் மொழியின் உபநிடதம்’ எனப் போற்றப்படுவது எது?

   A) திருக்குறள் B) திருமறை C) திருவருட்பா D) தாயுமானவர் பாடல்கள்

   E) விடை தெரியவில்லை

திண்ணை

10. வாழ்க்கை என்பது நீ சாகும் வரை அல்ல, மற்றவர் மனதில் நீ வாழும் வரை - இப்பொன்மொழி யாருடையது?

A) விவேகானந்தர் B) அன்னை தெரசா C) கைலாஷ் சத்தியார்த்தி D) காந்தியடிகள்

E) விடை தெரியவில்லை

11. அன்பு எதற்கு அடிப்படையாக விளங்குகிறது என்று வள்ளுவர் குறிப்பிடுகிறார்?

A) கருணை B) வீரம் C) கொடை D) A (ம) B E) விடை தெரியவில்லை

12. கீழ்க்காணும் சொற்களும் அவை பிரிக்கப்பட்ட வகையிலும் தவறானதைக் காண்க.

A) அன்பகத்து இல்லா - அன்பு + அகத்து + இல்லா B) வன்பாற்கண் - வன்பால் + கண்

C) தளிர்த்தற்று - தளிர்த்து + அற்று D) என்பிலதனை - எலும்பு + இல் + அதனை

E) விடை தெரியவில்லை

13. பொருந்தாத இணையைத் தேர்க.

உ.வே.சா பதிப்பித்த நூல்களும் அவற்றின் எண்ணிக்கைகளும்

A) வெண்பா நூல்கள் - 13 B) பரணி - 2 C) மும்மணிக்கோவை - 2 D) உலா - 6

E) விடை தெரியவில்லை

14. கீழ்க்காணும் கூற்றுகளைக் காண்க.

1) நான்மணிக்கடிகையின் ஆசிரியர் விளம்பி நாகனார்.

2) இது பதினெண்மேல்கணக்கு நூல்களுள் ஒன்று.

3) நான்கு மணிகள் கொண்ட அணிகலன் என்பது நான்மணிக்கடிகையின் பொருள்.

A) அனைத்தும் சரி B) 1 மட்டும் தவறு C) 2 மட்டும் தவறு D) 3 மட்டும் தவறு

E) விடை தெரியவில்லை

15. எவ்வழி நல்லவர் ஆடவர்

அவ்வழி நல்லை வாழிய நிலனே! - இவ்வடிகள் யாருடையது?

A) ஔவையார் B) மோசிகீரனார் C) பாம்பாட்டிச் சித்தர் D) கடுவெளி சித்தர்

E) விடை தெரியவில்லை

16. தமிழ்தாத்தா உ.வே.சா அவர்களின் தமிழ்ப் பணியைப் பாராட்டிய வெளிநாட்டு அறிஞர் யார்?

A) ஜி.யு.போப் B) சூலியல் வின்சோன் C) எமினோ D) A (ம) B

E) விடை தெரியவில்லை

17. பொருத்துக.

a. அல்லவை - 1. பாவம்

b. துவ்வாமை - 2. வஞ்சம்

c. அளைஇ - 3. வறுமை

d. படிறு - 4. கலந்து

A) 1 2 3 4 B) 2 1 4 3 C) 1 3 4 2 D) 2 1 3 4 E) விடை தெரியவில்லை

18. கீழ்காணும் கூற்றுகளைக் காண்க.

1) "உழவர் ஏரடிக்கும் சிறுகோலே அரசரது

செங்கோலை நடத்தும் கோல்" - கம்பர்

2) உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்
வீணில் உண்டு களிந்திருப்போரை நிந்தனை செய்வோம் - பாரதிதாசன்.

A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

19. கீழ்க்காணும் கூற்றுகளைக் காண்க.

1) மனிதனின் மனநிலையை இருள், மருள், தெருள், அருள் எனக் குறிப்பிட்டுள்ளார் முத்துராமலிங்கர்.

2) “சுதந்தரம் பயிரைத் தண்ணீர் விட்டோ வளர்த்தோம்; கண்ணீரால் காத்தோம்” - முத்துராமலிங்கர்.

3) “பிறப்பினால் வரும் கீழ்சாதி - மேல் சாதி என்னும் வேறுபாடுகளை அகற்றி மக்கள் அனைவரும் மனிதச் சாதி என்னும் பிழைத்தவனும் உண்டு” - முத்துராமலிங்கர்

4) “பனை மரத்திலிருந்து விழுந்து பிழைத்தவனும் உண்டு” - முத்துராமலிங்கர்

A) 1 சரி 2, 3 தவறு B) 1, 2 சரி 3 தவறு C) அனைத்தும் சரி D) 3 சரி 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

20. பொருத்துக.

a. வாடக் காண்பது - 1. யோகியர் உள்ளம்

b. ஒடுங்கக் காண்பது - 2. மின்னார் மருங்கு

c. தேடக் காண்பது - 3. பூமியில் வித்து

d. போடக் காண்பது - 4. நல்லறம் கீர்த்தி

A) 2 1 4 3 B) 1 2 3 4 C) 3 2 1 4 D) 2 1 3 4 E) விடை தெரியவில்லை

21. ‘ஒன்றாகு முன்றிலோ இல்’ என்னும் இவ்வடியில் முன்றில் என்பது இங்கு எதைக் குறிக்கின்றது.

A) வீட்டின் முன் இடம் B) திண்ணை C) வீடு D) A (ம) B E) விடை தெரியவில்லை

22. கீழ்க்காணும் கூற்றுகளைக் காண்க.

1) அறம் பெருகும் தமிழ்ப்படித்தால் - பெருஞ்சித்திரனார்.

2) நோய்க்கு மருந்து இலக்கியம் - மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார்.

A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

23. “நீர் உலையுள் பொன்திறந்து கொண்டு புகாவா நல்கினாள்” இவ்வடியில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள் யாது?

A) பரிவுடன் B) வெளியேறாதவாறு C) உணவாக D) உதவியாக

E) விடை தெரியவில்லை

24. கீழ்க்காணும் கூற்றுகளைக் காண்க.

1) தொல்காப்பியம் நடுகல் வணக்கம் பற்றிக் கூறுகிறது.

2) ஆடு முதலான பன்னிரண்டு இராசிகளையும், விண்மீன்களையும் வரைந்த செய்தி பட்டினப்பாலையில் காணப்படுகிறது.

A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

25. தமிழ் இலக்கியத்தில் எழுத்து என்பதற்கு ஓவியம் எனப் பொருள் இருந்ததை எந்த நூல்களின் செய்யுளடிகள் தெளிவுபடுத்துகின்றன?

A) அகநானூறு, நற்றிணை B) கலித்தொகை, நற்றிணை C) பரிபாடல், குறுந்தொகை

D) நற்றிணை, குறுந்தொகை E) விடை தெரியவில்லை

26. கீழ்க்காணும் கூற்றுகளைக் காண்க.

1) முனைப்பாடியார் ஒரு சமணப்புலவர்.

2) முனைப்பாடியாரின் காலம் பதின்மூன்றாம் நூற்றாண்டு.

3) அறநெறிச்சாரம் 225 பாடல்களைக் கொண்டது.

A) அனைத்தும் சரி B) 1 மட்டும் தவறு C) 2 மட்டும் தவறு D) 3 மட்டும் தவறு

E) விடை தெரியவில்லை

27. "நாளை என் தாய்மொழி சாகுமானால் - இன்றே
நான் இறந்து விடுவேன்" - என்று கூறியவர் யார்?

A) டாக்டர் கிரௌல் B) ரசூல் கம்சதேவ் C) மதன் மோகன் மாளவியா D) முன்சிராம்

E) விடை தெரியவில்லை

28. கூற்று 1 : 'வலக்கை தருவது இடக்கைக்கு தெரியக்கூடாது என்தற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர்.

கூற்று 2 : கல்லூரிக் கட்டணம் செலுத்த இயலாத மாணவர்களுக்கு அவர்களுக்கான கட்டணங்களையும் செலுத்தி தமது வீட்டையே விடுதியாக்கி, மாணவர்கள் தங்கிப் படிக்க வழி செய்தவர்.

மேற்காணும் கூற்றுகளுக்கு உரியவர் யார்?

A) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் B) மு. வரதராசனார் C) இரா.பி. சேதுபிள்ளை

D) பரிதிமாற்கலைஞர் E) விடை தெரியவில்லை

29. கீழ்காணும் கூற்றுகளைக் காண்க.

1) பூதத்தாழ்வார் சென்னையை அடுத்த மாமண்டூரில் பிறந்தவர்.

2) நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் இரண்டாம் திருவந்தாதியை இயற்றியவர், பூதத்தாழ்வார்.

A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

30. கீழ்க்காண்பனவற்றைக் கருத்தில் கொண்டு விடையளி.

1) "புனையா ஓவியம் கடுப்பப் புனைவில்" - முல்லைப்பாட்டு

2) "புனையா ஓவியம் புறம் போந்தன்ன" - மணிமேகலை

A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

31. கடல்நீர் ஆவியாகி மேகமாகும், பின்னர்
மேகம் குளிர்ந்து மழையாகப் பொழியும்
என்னும் அறிவியல் செய்தி குறிப்பிடப்பட்ட நூல் எது?

1) முல்லைப்பாட்டு 2) பரிபாடல் 3) திருக்குறள் 4) கார்நாற்பது 5) திருப்பாவை

A) அனைத்தும் சரி B) 1, 2, 4 சரி 3, 5 தவறு C) 1, 3, 5 சரி 2, 4 தவறு

D) 1, 4, 5 சரி 2, 3 தவறு E) விடை தெரியவில்லை

32. “வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்

வைத்தூறு போலக் கெடும்” - இக்குறட்பாவில் பயின்று வந்துள்ள அணி யாது?

A) உவமையணி B) எடுத்துக்காட்டு உவமையணி C) இல்பொருள் உவமையணி

D) ஏகதேச உருவக அணி E) விடை தெரியவில்லை

33. போர்க்களத்தில் மார்பில் புண்பட்ட வீரர் ஒருவரின் காயத்தை வெண்ணிற ஊசியால் தைத்த செய்தி பற்றி குறிப்பிடும் நூல் எது?

A) தொல்காப்பியம் B) திருக்குறள் C) பதிற்றுப்பத்து D) நற்றிணை

E) விடை தெரியவில்லை

34. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) பஞ்ச பூதங்களால் ஆனது இவ்வுலகம் என்பதை தொல்காப்பியர் தமது தொல்காப்பியம் என்னும் நூலில் குறிப்பிட்டுள்ளார்.

2) கடல்நீர் முகந்த கமஞ்சூழ் எழிலி - கார்நாற்பது.

3) தினையளவு போதாக் சிறுபுல்நீர் நீண்ட
பனையளவு காட்டும் படித்தால் - கபிலர்

A) 1 மட்டும் தவறு B) 1, 2, 3 சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

35. உரவுநீர் அழுவத்து ஓடுகலம் கரையும் துறை - என்ற அடிகள் இடம்பெற்ற நூல்

A) பொருநராற்றுப்படை B) அகநானூறு C) பட்டினப்பாலை D) பெரும்பானாற்றுப்படை

E) விடை தெரியவில்லை

36. தமிழர்களின் கப்பற்கலை தொடர்புடைய பின்வரும் கூற்றுகளைக் கவனி?

1) கடலோடா கால்வல் நெடுந்தேர் கடலோடும் என்னும் திருக்குறள் பெரிய கப்பல்கள் இருந்தன என்பதற்குச் சான்றாகும்.

2) உலகு கிளர்ந்தன்ன உருகெழு வங்கம் என்று பெரிய கப்பலை புறநானூறு கூறுகிறது.

3) அருங்கலம் தரீஇயர் நீர்மிசை நிவக்கும் என்று பெரிய கப்பலை பதிற்றுப்பத்து கூறுகிறது.

A) கூற்று 1, 3 மட்டும் சரி B) கூற்று 2, 3 மட்டும் சரி C) கூற்று 1, 2 மட்டும் சரி

D) கூற்று 1, 2, 3 சரி E) விடை தெரியவில்லை

37. பொருத்துக.

a. வங்கம் - 1. கரை உயர்ந்த

b. எல் - 2. கலங்கரை விளக்கம்

c. கோடு உயர் - 3. கப்பல்

d. மாட ஒள்ளெரி - 4. பகல்

A) 3 4 1 2 B) 2 1 4 3 C) 3 1 4 2 D) 4 1 2 3 E) விடை தெரியவில்லை

38. ஆடும் மயில் நிகர் பெண்களெல்லாம் உயிர்

அன்பினைச் சித்திரம் செய்க என்றார் - என்ற அடியைப் பாடியவர்

A) பாரதியார் B) பாரதிதாசன் C) நாமக்கல் கவிஞர் D) சுரதா

E) விடை தெரியவில்லை

39. உலகத் தமிழ்ச்சங்கம் தொடர்புடைய கீழ்க்கண்ட கூற்றில் சரியானது எது?

1) 1981 ல் மதுரையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் உலகத்தமிழர் சங்கம் நிறுவப்படும் என்று அறிவிக்கப்பட்டது.

2) உலகத் தமிழ்ச்சங்கம் 2016 ஆம் ஆண்டு திறந்து வைக்கப்பட்டது. வெளிப்புறச் சுற்றுச்சுவரில் 1330 குறட்பாக்களும் இடம்பெற்றுள்ளன.

3) உலகத்தமிழ்ச் சங்கத்தின் மற்றோர் அமைப்பான சங்கத் தமிழ்க் காட்சிக்கூடம் தனிக்கட்டடத்தில் இயங்கி வருகிறது.

A) கூற்று 1, 3 மட்டும் சரி B) கூற்று 1, 2 மட்டும் சரி C) கூற்று 2, 3 மட்டும் சரி

D) அனைத்தும் சரி E) விடை தெரியவில்லை

40. பொருத்துக.

a. ஊக்கிவிடும் - 1. நோன்பு

b. குறி - 2. தருகின்ற

c. விரதம் - 3. ஊக்கப்படுத்தும்

d. பொழிகிற - 4. குறிக்கோள்

A) 1 2 3 4 B) 3 4 1 2 C) 4 3 1 2 D) 2 1 4 3 E) விடை தெரியவில்லை

41. பகைவென்ற திறம்பாடும் பரணிவகை - செழும்

பரிபாடல் கலம்பகங்கள் எட்டுத்தொகை - என்ற பாடலைப் பாடியவர்

A) சுரதா B) தாராபாரதி C) நாமக்கல் கவிஞர் D) உடுமலை நாராயணகவி

E) விடை தெரியவில்லை

42. சுட்ட பழங்கள் பொறுக்க

சிறுவர் கூட்டம் அலைமோதும் - எனக் கூறும் நூல்

A) தேன்மழை B) கொல்லிப்பாவை C) அப்படியே நிற்கட்டும் அந்த மரம்

D) கொங்குதேர் வாழக்கை E) விடை தெரியவில்லை

43. புறனானூற்றில் எத்தனையாவது பாடலை காவற்பெண்டு என்பவர் இயற்றினார்?

A) 84வது பாடல் B) 85வது பாடல் C) 86வது பாடல் D) 87வது பாடல்

E) விடை தெரியவில்லை

44. முயலும் நாயை விரட்டுமாம் - நல்ல

முனையுள்ள பாஞ்சால நாட்டினிலே - என்ற பாடல் அடிகளைப் பாடியவர்

A) சுரதா B) நா.வானமாமலை C) ராஜமார்த்தாண்டன் D) க.சக்திவேல்

E) விடை தெரியவில்லை

45. பொருத்துக.

a. மாரி - 1. வறண்டிருந்த

b. மடமகள் - 2. கொடுத்தாள்

c. வறந்திருந்த - 3. மழை

d. நல்கினாள் - 4. இளமகள்

A) 3 4 1 2 B) 2 1 4 3 C) 3 1 4 2 D) 4 1 2 3 E) விடை தெரியவில்லை

46. மாரியொன்று இன்றி வறந்திருந்த காலத்தும் பாரி
மடமகள் பாண்மகற்கு - என்ற அடிகளைப் பாடியவர்

A) கடியலூர் உருத்திரங்கண்ணனார் B) மருதன் இளநாகனார் C) பூதந்சேந்தனார்

D) முன்றுரை அரையனார் E) விடை தெரியவில்லை

47. டி.கே.சிதம்பரனார் கீழ்கண்ட எவ்வாறு மட்டும் புகழப்படவில்லை?

A) தமிழியல் காவலர் B) கடித இலக்கியத்தின் முன்னோடி C) வளர்தமிழ் ஆர்வலர்

D) குற்றால முனிவர் E) விடை தெரியவில்லை

48. உள்ளத்தில் எது இல்லாமல் இருப்பதே சிறந்த அறமாகும்?

A) மகிழ்ச்சி B) மன்னிப்பு C) துணிவு D) குற்றம் E) விடை தெரியவில்லை

49. தமது வீட்டில் வட்டத்தொட்டி என்னும் பெயரில் இலக்கியக் கூடங்கள் நடத்தி வந்தவர்

A) இரசிகமணி B) கி.வா.ஜகந்நாதன் C) கண்ணதாசன் D) சே.பிருந்தா

E) விடை தெரியவில்லை

50. மங்கையராய் பிறப்பதற்கே நல்ல மாதவம் செய்திடல் வேண்டுமம்மா" - என்ற பாடலின் ஆசிரியர் யார்?

A) பாரதியார் B) பாவேந்தர் C) கவிமணி D) புதுமைப்பித்தன்

E) விடை தெரியவில்லை

51. பொருத்துக.

a. சூல் - 1. ராமகிருஷ்ணன்

b. சஞ்சாரம் - 2. சோ.தர்மன்

c. அஞ்ஞாடி - 3. வெங்கடேசன்

d. காவல் கோட்டம் - 4. பூமணி

A) 2 1 3 4 B) 2 1 4 3 C) 4 3 2 1 D) 3 2 1 4 E) விடை தெரியவில்லை

52. "யானோ அரசன் யானே கள்வன்" - இந்த தொடருக்கு தொடர்புடைய நூல் எது?

A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை C) நன்னூல் D) தொல்காப்பியம்

E) விடை தெரியவில்லை

53. "கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றை யவை" - இக்குறளில் மாடு என்பதன் பொருள்.

A) அறிவு B) துணிவு C) செல்வம் D) முயற்சி E) விடை தெரியவில்லை

54. "மடியின்மை" என்பதில் மடி என்பதன் பொருள் என்ன?

A) சோம்பல் B) துணிச்சல் C) வீரம் D) ஒழுக்கம் E) விடை தெரியவில்லை

55. காவியம் என்னும் இதழை நடத்தியவர் யார்?

A) தமிழ்நதி B) நகுலன் C) சி.மணி D) சுரதா E) விடை தெரியவில்லை

56. சேரன் தம்பி சிலம்பை இசைத்ததும் என்று கூறியவர் யார்?

A) பாரதியார் B) திரு.வி.க C) அண்ணா D) முடியரசன் E) விடை தெரியவில்லை

57. "உவா உறவந்து கூடும் உடுபதி, இரவி ஒத்தார்" - யார் யார்?

A) சடாயு, இராமன் B) இராமன், குகன் C) இராமன், சுக்ரீவன் D) இராமன், சவரி

E) விடை தெரியவில்லை

58. "வள்ளுவனைப் பெற்றதால் பெற்றதே புகழ் வையகமே" என்று வள்ளுவரைப் புகழ்ந்தவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன் C) அறிஞர் அண்ணா D) திரு.வி.க

E) விடை தெரியவில்லை

59. பொருந்தாத இணையைத் தேர்க.

A) சவரி பிறப்பு நீங்கு படலம் - ஆரண்ய காண்டம்

B) சடாயு உயிர்நீத்த படலம் - யுத்த காண்டம்

C) நட்பு கோட்படலம் - கிட்கிந்தா காண்டம்

D) குகப்படலம் - அயோத்தியா காண்டம்

E) விடை தெரியவில்லை

60. கடையேழு வள்ளல்களின் வரிசையைச் சாராத மன்னர்கள்

A) ஆண் அண்டிரனும் அதிகனும் B) நள்ளியும் ஓரியும் C) நல்லியக் கோடனும் குமணனும்

D) பாரியும் காரியும் E) விடை தெரியவில்லை

61. கீழ்கண்ட எந்த பகுதியில் இருந்து பறித்து வந்த நெல்லிக்கனியை ஔவையாருக்கு அதியமான் கொடுத்ததாக கூறப்படுகிறது?

A) ஆவினன்குடி B) தகடூர் C) பூரிக்கல் D) பொதியமலை E) விடை தெரியவில்லை

62. பொருத்துக.

a. அரசியல் - 1. 7

b. துறவறவியல் - 2. 4

c. களவியல் - 3. 13

d. பாயிரவியல் - 4. 25

A) 2 1 4 3 B) 3 2 4 1 C) 2 3 1 4 D) 4 3 1 2 E) விடை தெரியவில்லை

63. இலக்கியத்தையும், மொழியையும் ஒருசேர பேசுகின்ற இலக்கண நூல்?

A) தொல்காப்பியம் B) நன்னூல் C) தண்டியலங்காரம் D) நேமிநாதம்

E) விடை தெரியவில்லை

64. "நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை" - என்னும் பாடல்வரி இடம்பெற்றுள்ள நூல்?

A) அகநானூறு B) புறநானூறு C) நற்றிணை D) நெடுநல்வாடை

E) விடை தெரியவில்லை

65. தேசிய பேரிடர் மேலாண்மை ஆணையத்தை எந்த ஆண்டு நடுவண் அரசு அமைத்தது?

A) 2002, டிசம்பர் 23 B) 2004, டிசம்பர் 24 C) 2005, டிசம்பர் 23 D) 2006, டிசம்பர் 24

E) விடை தெரியவில்லை

66. குடும்பு என்னும் சொல்லின் பொருள்

A) குடுவை B) கூடிவாழ்தல் C) குடுமி D) மேற்கண்ட எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

67. பொருந்தாத இணை?

A) வித்தியாரம்பம் - கல்வி தொடக்கம் B) உபாத்தியாயர் - கல்வி பயிற்சி

C) அக்ஷராப்பியாசம் - எழுத்து பயிற்சி D) குழிமாற்று - பெருக்கல் வாய்ப்பாடு

E) விடை தெரியவில்லை

68. வாய்ப்பாடுகளை மனப்பாடம் செய்ய இருந்த புத்தகம்?

A) பிரபு சுவடி B) அறிச்சுவடி C) பிரபாவதி சுவடி D) இவற்றில் எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

69. தாங்கெட நேர்ந்த போதும்

தமிழ்கெட லாற்றா அண்ணல்

வேங்கடசாமி என்பேன் - என்று பாடியவர்?

A) பாரதியார் B) பாரதிதாசன் C) சுரதா D) பட்டுக்கோட்டை E) விடை தெரியவில்லை

70. சிற்பி பாலசுப்ரமணியத்தின் நூல்களில் பொருந்தாதது எது?

A) ஒரு கிராமத்து நதி B) பூஜ்யங்களின் சங்கிலி C) வெயிலும் நிகழும் D) சர்ப்பயாகம்

E) விடை தெரியவில்லை

71. சுவடியோடு பொருந்தாத ஒன்றைத் தேர்வு செய்க.

A) வசம்பு B) மணத்தக்காளியிலைச் சாறு C) கடுக்காய் D) மாவிலைக்கரி

E) விடை தெரியவில்லை

72. “யானை புக்கபுலம் போல” என்னும் புறநானூற்றின் பாடல் அந்நூலில் எத்தனையாவது பாடல்?

A) 108 B) 148 C) 184 D) 168 E) விடை தெரியவில்லை

73. “ஏழேழாகிய பதினான்கு உலகங்களும் எனது பெயரும் இங்கு எவ்வளவு காலம் இருக்குமே அவ்வளவு காலம் உனக்கே உரிமை எனக் கொடுத்தேன்” என்று ராமன் யாரிடம் கூறினான்?

A) அனுமன் B) சுக்ரீவன் C) குகன் D) வீடணன் E) விடை தெரியவில்லை

74. “எத்திசைச் செலினும் அத்திசைச் சோறே” என்ற கூற்று எந்த நூலில் காணப்படுகிறது?

A) அனநானூறு B) புறநானூறு C) சிறுபாணாற்றுப்படை D) மலைபடுகடாம்

E) விடை தெரியவில்லை

75. புதுக்கவிதை இயக்கத்தைத் தோற்றுவித்தவர் யார்?

A) வால்ட் விட்மன் B) பாரதி C) பாப்லோ நெரூடா D) மல்லார்மே

E) விடை தெரியவில்லை

76. தூங்கும் போது நான் நானாக இல்லையெனில் விழித்தெழுந்த பின் நான் யார்? என்ற வரிகள் யாருடையது?

A) வால்ட் விட்மன் B) மல்லார்மே C) பாப்லோ நெரூடா D) எர்னஸ்ட் காசிதர்

E) விடை தெரியவில்லை

77. ஒரிய மொழிக் கவிஞர் மனோரமா பிஸ்வாஸ்ன் பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம் என்னும் நூல் யாருடைய மொழிபெயர்ப்பு?

A) ஜெயராமன் B) இந்திரன் C) வெங்கடாசலபதி D) ஸ்ரீராம்

E) விடை தெரியவில்லை

78. தொல்காப்பியத்தையும் அதன் உரைகளையும் பின்பற்றி எழுதப்பட்ட நூல் ........................

A) நாலாயிர திவ்ய பிரபந்தம் B) நான்மணிக்கடிகை C) நாலடியார் D) நன்னூல்

E) விடை தெரியவில்லை

79. "காலம் களனே காரணம் என்று இம்மூவகை எற்றிமொழிநரும் உளரே" என்னும் வரிகள் இடம்பெற்ற நூல்?

A) நன்னூல் B) ஐங்குறுநூறு C) தொல்காப்பியம் D) திருமலை முருகன் பள்ளு

E) விடை தெரியவில்லை

80. ஆயிரம் முகத்தான் அகன்றது ஆயினும் பாயிரம் இல்லது பனுவல் அன்றே - இவ்வடிகள் இடம்பெற்றுள்ள நூல்?

A) நாலடியார் B) தொல்காப்பியம் C) நன்னூல் D) ஐங்குறுநூறு

E) விடை தெரியவில்லை

81. 'வெஞ்சின வேந்தே உன் பகை அலைக்கலங்கி வாழ்வோர், போகிய பேர்ஊர்ப் பாழ்' என்ற பாடலடி இடம்பெற்றுள்ள நூல்

A) நன்னூல் B) நற்றிணை C) யுகத்தின் பாடல் D) நாலடியார்

E) விடை தெரியவில்லை

82. தமிழ் இலக்கிய வரலாற்றில் புலமைக்க திரவன் என தமிழறிஞர்கள் போற்றிய தமிழ் மொழிப் பெரும்புலவர்

A) உ.வே.சா B) மீனாட்சி சுந்தரனார் C) திருவள்ளுவர் D) இளங்கோவடிகள்

E) விடை தெரியவில்லை

83. "தமிழ் தழீஇய சாயலவர்" எனப் பாடியவர்

A) கம்பன் B) இளங்கோவடிகள் C) சேக்கிழார் D) ஆண்டாள்

E) விடை தெரியவில்லை

84. 'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்' என்று கூறியவர்

A) கம்பர் B) இளங்கோவடிகள் C) பாரதி D) வள்ளுவர் E) விடை தெரியவில்லை

85. 'ஈன்ற' என்பதன் பகுபத உறுப்பிலக்கணம் தருக.

A) ஈன்று + அ B) ஈன் + அ C) ஈ + அ D) ஈன் + ற் + அ

E) விடை தெரியவில்லை

86. "மீன்கள்கோடி கோடிசூழ வெண்ணிலாவே! ஒரு வெள்ளியோடம் போலவரும் வெண்ணிலாவே" இவ்வரிகளை பாடியவர்?

A) அழகிய பெரியவன் B) பெரியவன் கவிராயர் C) பாரதி D) கவிமணி

E) விடை தெரியவில்லை

87. "அருணகிரி நாவில் பழக்கம் - தரும்
அந்தத் திருப்புகழ் முழக்கம்" - இவ்வரிகளைப் பாடியவர்?
A) அழகிய பெரியவர் B) பெரியவன் கவிராயர் C) திருமூலர்
D) சென்னிகுளம் அண்ணாமலையார் E) விடை தெரியவில்லை

88. குறுந்தொகையின் கடவுள் வாழ்த்துப் பாடலை பாடியவர்
A) உக்கிரப்பெருவழுதி B) பெருந்தேவனார் C) கபிலர் D) பூரிக்கோ
E) விடை தெரியவில்லை

89. "தமக்கென முயலா நோன்தால் பிறர்கென முயலுநர் உண்மையானே" இப்பாடல் அமைந்துள்ள துறை?
A) பொதுவியல் B) பொருண்மொழிக்காஞ்சித்துறை C) காஞ்சித்துறை D) B, C இரண்டும்
E) விடை தெரியவில்லை

90. "கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே ஆய மகள்" எனக் கூறும் நூல்?
A) நற்றிணை B) புறநானூறு C) கலித்தொகை D) குறுந்தொகை
E) விடை தெரியவில்லை

91. கல்வி கற்பிக்கப்படும் இடங்களை ஓதும் பள்ளி என்று கூறும் நூல்?
A) பெரிய திருமொழி B) திவாகர நிகண்டு C) சீவகசிந்தாமணி D) மணிமேகலை
E) விடை தெரியவில்லை

92. "சுதையொழி மேனிலை துலங்கித் தோன்றலால் புதுமலர்த் தெருத்தோறும் சிந்திப் பொங்கலால்"
இவ்வரிகள்இடம் பெற்றுள்ள நூல் எது?
A) சிலப்பதிகாரம் B) மணிமேகலை C) சீறாப்புராணம் D) முதுமொழிமாலை
E) விடை தெரியவில்லை

93. "பொன்னென மலர்ந்த வேங்கை மலிதொடர் அடைச்சிப் பொலிந்த ஆயமொடு காண் தக இயலித் தழலை வாங்கியும் தட்டை ஓப்பியும்" இவ்வரிகளை பாடியவர்?
A) கபிலர் B) பேயனார் C) வீரைவெளியன்தித்தனார் D) ஓரம்போகியார்
E) விடை தெரியவில்லை

94. அகநானூற்றுப் பாடல்களில் 40 பாடல்களை கொண்டுள்ள திணைகள் யாவை?
1) குறிஞ்சி 2) முல்லை 3) மருதம் 4) நெய்தல் 5) பாலை
A) 1, 2, 4 B) 2, 3, 4 C) 1, 2, 3 D) 3, 4, 5 E) விடை தெரியவில்லை

95. இகழ்ச்சியில் கெட்டாரை உள்ளுக தாமதம்
மகிழ்ச்சியின் மைந்துறும் போழ்து - என்ற குறட்பாவில் மைந்துறும் என்ற சொல்லின் பொருள் என்ன?
A) நினைத்துப் பார்த்தல் B) மறதியடைதல் C) மகிழ்ச்சியடைதல்
D) கடமையை மறத்தல் E) விடை தெரியவில்லை

96. குற்றாலக் குறவஞ்சி திரிகூட ராசப்பக் கவிராயரின் ...................... என்று போற்றப்பட்டது.
A) மொழிக்கிரீடம் B) மணிமகுடம் C) கவிதைக்கிரீடம் D) செய்யுள் கிரீடம்
E) விடை தெரியவில்லை

97. மாணிக்கவாசகர் ....................... மன்னரிடம் தலைமை ஆசிரியராகப் பணியாற்றினார்.

A) விசயரங்க சொக்கநாதர் B) அரிமர்த்தன பாண்டியன் C) இராணிமங்கம்மாள்

D) இராசராசன் E) விடை தெரியவில்லை

98. "வீட்டுக்கு உயிர் வேலி!

வீதிக்கு விளக்கு தூண்!

நாட்டுக்கு கோட்டை மதில்!

நடமாடும் கொடிமரம் நீ" - என்று பாடியவர் யார்?

A) பாரதி B) பாரதிதாசன் C) தாராபாரதி D) சுரதா E) விடை தெரியவில்லை

99. "தேடுகல்வி இலாததோர் ஊரைத் தீயினுக்கு இரையாக மடுதல்" என்று கல்விக் கூடங்களின் இன்றியமையாமையைச் சினத்துடன் எடுத்துக்காட்டியவர் யார்?

A) பாரதி B) பாரதிதாசன் C) தாராபாரதி D) சுரதா E) விடை தெரியவில்லை

100. "நிதம்தரும் துயர்களை நிமிர்ந்துநின் றெதிர்த்திட நிச்சயம்

சுதந்திரம் அது வேண்டும்" என்று பாடியவர் யார்?

A) பாரதி B) பாரதிதாசன் C) ஜீவானந்தம் D) நாமக்கல் கவிஞர்

E) விடை தெரியவில்லை

101. திரு.வி.க அவர்கள் யாரிடம் சைவ நூல்களை பயின்றார்?

A) விருத்தாசலனார் B) நா.கதிரைவேல் C) மயிலை தணிகாசலம் D) திருவாரூரார்

E) விடை தெரியவில்லை

102. திரு.வி.க அவர்கள் கீழ்கண்ட எந்த இதழ்களில் ஆசிரியராக பணியாற்றினார்?

1) தென்றல் 2) தேசபக்தன் 3) நவசக்தி 4) தமிழ்நிலம்

A) 1, 2 B) 2, 3 C) 3, 4 D) 1, 4 E) விடை தெரியவில்லை

103. திரு.வி.க அவர்கள் தலைமை தமிழாசிரியராக எங்கு பணியாற்றினார்?

A) வெஸ்லி கல்லூரி B) வெஸ்லி பள்ளி C) சென்னை பல்கலைக்கழகம்

D) அண்ணாமலை பல்கலைக்கழகம் E) விடை தெரியவில்லை

104. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) திராவிடர்களை மலைநில மனிதர்கள் என்று அழைக்கிறார் கமில் சுவலபில்.

2) சேயோன் மேய மைவரை உலகம் - தொல்காப்பியம்.

3) "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" - நெடுந்தொகை.

4) கொடை என்னும் தமிழ்ச்சொல் மலை என்னும் தமிழ்ச்சொல் மலை என்னும் பொருளில் வழங்கப்படுகிறது.

A) 1, 3, 4 சரி 2 தவறு B) 1, 2, 4 சரி 3 தவறு C) 1, 2, 3 சரி 4 தவறு

D) அனைத்தும் சரி E) விடை தெரியவில்லை

105. "எத்தனை உயரம் இமயமலை - அதில்

இன்னொரு சிகரம் உனது தலை!" என்னும் வரிகள் யாருடையது?

A) தாராபாரதி B) பிரமிள் C) பிரளயன் D) சி.சு.செல்லப்பா E) விடை தெரியவில்லை

106. பொருத்துக.

a. வதுவை - 1. நெருங்கிய

b. விண்டு - 2. போரொலி

c. கம்பலை - 3. திறந்து

d. துன்ன - 4. திருமணம்

A) 1 2 3 4 B) 3 2 4 1 C) 3 1 4 2 D) 4 3 2 1 E) விடை தெரியவில்லை

107. கீழ்க்கண்டவற்றுள் தவறான இணை எது?

A) விழுந்த மலர்
கிளைக்குத் திரும்புகிறது;
அடடா... வண்ணத்துப்பூச்சி - மோரிடாகே.

B) பட்டுப்போன மரக்கிளை
அமர்ந்து ஓய்வெடுக்கும் காகம்
இலையுதிர் கால மாலை - பாஷோ

C) பெட்டிக்கு வந்தபின்
எல்லாக் காய்களும் சமம்தான்
சதுரங்கக் காய்கள் - பிரபஞ்சன்

D) சிறகிலிருந்து பிரிந்து இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்க்கையை எழுதிச் செல்கிறது - பிரமிள்

E) விடை தெரியவில்லை

108. பொருத்துக.

a. கொண்மூ - 1. தேன்

b. ஆயம் - 2. மேகம்

c. சமம் - 3. சுற்றம்

d. பிரசம் - 4. போர்

A) 1 3 2 4 B) 1 2 3 4 C) 2 3 4 1 D) 4 3 2 1 E) விடை தெரியவில்லை

109. கீழ்க்கண்ட இணைகளுள் சரியானது எது?

A) லங்காபுரி ராஜா - சிறுகதைத் தொகுப்புகள் B) நக்ஷத்திரவாசி - நாடகம்

C) வெயிலும் நிழலும் - கட்டுரைத் தொகுப்பு D) மேற்கண்ட அனைத்தும்

E) விடை தெரியவில்லை

110. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) ஆசிரியர் கூறும் கருத்துகளை ஒரு முறைக்கு இருமுறை கேட்கும் மாணவர்கள் நூலைப் பிழையின்றிக் கற்கும் திறன் பெற்றவர்.

2) மூன்று முறை கேட்போர் பாடக் கருத்துகளைப் பிறர்க்கு முறையாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெறுபவர்.

A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

111. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) ஐங்குறுநூறு எட்டுத்தொகை நூல்களுள் ஒன்று.

2) ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்தைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.

3) ஐங்குறுநூற்றைத் தொகுத்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.

4) ஐங்குறுநூற்றின் முல்லைத் திணையைப் பாடிய புலவர் இயற்றிய 105 பாடல்கள் கிடைத்துள்ளன.

A) அனைத்தும் சரி B) 1, 2 சரி 3, 4 தவறு C) 1, 2, 4 சரி 3 தவறு

D) 1, 3, 4 சரி 2 தவறு E) விடை தெரியவில்லை

112. காவடி எடுக்கும் அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது எங்கு சென்று அடைவதாக அண்ணாமலையார் தம் பாடலில் குறிப்பிடுகிறார்?

A) தேவிப்பட்டினத்தில் உள்ள தேவர்களின் செவியை

B) அமராவதிப்பட்டினத்தில் உள்ள தேவர்களின் செவியை

C) தேவிப்பட்டினத்தில் உள்ள முருகனின் செவியை

D) அமராவதிப்பட்டினத்தில் உள்ள முருகனின் செவியை

E) விடை தெரியவில்லை

113. கீழக்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) மனோன்மணீயம் தமிழின் முதல் பாவடிவ நாடகநூல் ஆகும்.

2) லிட்டன் பிரபு 1806இல் எழுதிய ரகசிய வழி என்ற நூலைத் தழுவி 1881 இல் பேராசிரியர் சுந்தரனார் இதைத் தமிழில் எழுதியுள்ளார்.

3) மனோன்மணீயம் நான்கு அங்கங்களையும் இருபது களங்களையும் கொண்டது.

4) மனோன்மணீயத்தில் உள்ள கிளைக்கதை சிவகாமியின் சரிதம்.

A) அனைத்தும் சரி B) 1, 2 சரி 3, 4 தவறு C) 1, 3 சரி 2, 4 தவறு

D) 1, 2, 4 சரி 3 தவறு E) விடை தெரியவில்லை

114. பாரதிதாசன் பற்றிய கூற்றுகளைக் காண்க.

1) பாரதிதாசனால் 1937இல் எழுதப்பட்டது புரட்சிக்கவி.

2) ஆங்கில மொழியில் அமைந்த தொழிலாளர் சட்டத்தைத் தமிழ்வடிவில் தந்தவர்.

3) குயில் என்னும் இலக்கிய இதழை நடத்தினார்.

4) இவரின் வாழ்வினில் செம்மையைச் செய்பவன் நீயே என்ற பாடலை புதுமை அரசு தமிழ்த்தாய் வாழ்த்தாக ஏற்றுக்கொண்டுள்ளது.

A) அனைத்தும் சரி B) 1, 2 சரி 3, 4 தவறு C) 1, 2, 4 சரி 3 தவறு

D) 1, 3, 4 சரி 2 தவறு E) விடை தெரியவில்லை

115. "இறடிப் பொம்மல் பெறுகுவிர்" என்ற செய்யுளடியில் பொம்மல் என்பதன் பொருள்

A) பரிசில் B) சுற்றம் C) சோறு D) மேற்கண்ட எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

116. “கோடு கொண்டு எழுந்த கொடுஞ் செலவு எழிலி” என்னும் செய்யுளடி கீழ்க்கண்ட எந்த நூலில் இடம் பெற்றுள்ளது?

A) முல்லைப்பாட்டு B) குறுந்தொகை C) புறநானூறு D) சிலப்பதிகாரம்

E) விடை தெரியவில்லை

117. ஊரின் நடுவில் நச்சுமரம் பழுத்தது போன்றது எது?

A) ஒருவராலும் விரும்பப்படாதவர் பெற்ற பெருஞ்செல்வம்.

B) பிறருக்கு கொடுக்காமலும் தானும் அனுபவிக்காமலும் இருப்பது.

C) பிறர் நன்மையைக் கருதாத மன்னனை தலைமையாக உள்ள நாடு.

D) மேற்கண்ட எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

118. உரை(ற) ஊற்றி ஊற்றிப் பார்த்தாலும்;
புளிக்காத பால்; தந்தை தந்த தாய்ப்பால்
முப்பால்! - என்று திருக்குறளைப் புகழ்ந்தவர் யார்?

A) அறிவுமதி B) ச.முகமது அலி C) அப்துல் ரகுமான் D) ஈரோடு தமிழன்பன்

E) விடை தெரியவில்லை

119. “அல்லில் ஆயினும் விருந்து வரின் உவக்கும்” என்னும் செய்யுளடி இடம்பெற்றுள்ள நூல் எது?

A) புறநானூறு B) நற்றிணை C) குறுந்தொகை D) மணிமேகலை

E) விடை தெரியவில்லை

120. “கறங்கு இசை விழவின் உறந்தை......” என்னும் செய்யுளடி எந்த நூலில் இடம்பெற்றுள்ளது?

A) அகநானூறு B) புறநானூறு C) நற்றிணை D) குறுந்தொகை

E) விடை தெரியவில்லை

121. “மைக்கடல் முத்துக்கு ஈடாய் மிக்க நெல்முத்து” என்னும் செய்யுளடி இடம்பெற்ற நூல் எது?

A) நற்றிணை B) பெருநராற்றுப்படை C) முக்கூடற்பள்ளு D) புறநானூறு

E) விடை தெரியவில்லை

122. நேற்று வந்த விருந்தினரைப் பேணுவதற்குப் பொருள் தேவைப்பட்டதால் இரும்பினால் செய்த பழைய வாளை அடகு வைத்தான் தலைவன் என்னும் செய்தியைக் கூறும் நூல் எது?

A) கார் நாற்பது B) அகநானூறு C) புறநானூறு D) நற்றிணை

E) விடை தெரியவில்லை

123. முல்லை நிலத்தின் சிறுபொழுது எது?

A) காலை B) நண்பகல் C) மாலை D) யாமம் E) விடை தெரியவில்லை

124. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) கல்வியும் செல்வமும் பெற்ற பெண்கள் விருந்தும் ஈகையும் செய்வதாக கம்பர் குறிப்பிட்டுள்ளார்.

2) கண்ணகி கோவலனைப் பிரிந்து வாழ்வதைவிட விருந்தினரைப் போற்ற முடியாத நிலையை எண்ணி வருந்தியதாக இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார்.

A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

125. விருந்தளிக்க தானியமில்லாததால் அன்று விதைத்து விட்டு வந்த நெல்லை அரிந்து வந்து பின் சமைத்து விருந்து படைத்ததாக கூறும் நூல் எது?

A) புறநானூறு B) பெரியபுராணம் C) சிறுபாணாற்றுப்படை D) குறுந்தொகை

E) விடை தெரியவில்லை

126. விருந்தோம்பல் செய்யும் இல்லற ஒழுக்கத்தின் பண்புகள் எத்தனை?

A) ஆறு B) ஒன்பது C) நான்கு D) எட்டு E) விடை தெரியவில்லை

127. துறவு, இல்லறம், பெண்களுக்குரிய பண்புகள், வாழ்வியல் நெறிகள், மறுவாழ்வில் அடையும் நன்மைகள் ஆகியவற்றை பாடுவதாக அமைந்த நூல் எது?

A) குறுந்தொகை B) நற்றிணை C) மலைபடுகடாம் D) மேற்கண்ட எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

128. “இடிப்பாரை இல்லாத ஏமரா மன்னன்

கெடுப்பார் இலானுங் கெடும்” - இக்குறள் எவ்வதிகாரத்தில் இடம்பெற்றுள்ளது?

A) கொடுங்கோன்மை B) ஆள்வினை உடைமை C) பெரியாரைத் துணைக்கோடல்

D) மேற்கண்ட எதுவுமில்லை E) விடை தெரியவில்லை

129. “முப்பழமொடு பால் அன்னம்; முகம் கடுத்து இடுவாராயின்; கப்பிய பசியி னோடு; கடும்பசி ஆகும் கானே” இவ்வடி பயின்று வரும் நூல் எது?

A) காசிக்கண்டம் B) குறுந்தொகை C) புறநானூறு D) விவேக சிந்தாமணி

E) விடை தெரியவில்லை

130. இல்லத்தின் வாயிலை மூடுவதற்கு முன் உணவு உண்ண வேண்டியவர்கள் யாரேனும் உள்ளீர்களா என கேட்கும் வழக்கம் இருந்ததனைக் குறிப்பிடும் நூல் எது?

A) குறுந்தொகை B) கொன்றை வேந்தன் C) புறநானூறு D) அகநானூறு

E) விடை தெரியவில்லை

131. “இட்டதோர் தாமரைப்பூ; இதழ்விரித் திருத்தல் போலே; வட்டமாய் புறாக்கள் கூடி இரையுண்ணும்.....” என்று பாடியவர் யார்?

A) பாரதியார் B) பாரதிதாசன் C) அறிவுமதி D) காளமேகப்புலவர்

E) விடை தெரியவில்லை

132. நறுந்தொகை என்று அழைக்கப்படும் நூல் எது?

A) அகநானூறு B) நைடதம் C) காசிக்காண்டம் D) வெற்றி வேற்கை

E) விடை தெரியவில்லை

133. “உப்பிலாக் கூழ் இட்டாலும்; உண்பதே அமிர்தம் ஆகும்; என்று கூறும் நூல் எது?

A) நற்றிணை B) குறுந்தொகை C) சிலப்பதிகாரம் D) மேற்கண்ட எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

134. பூவின் மலர்ந்த நிலையைக் குறிக்கும் சொல் எது?

A) முகை B) அலர் C) மலர் D) B & C E) விடை தெரியவில்லை

135. “வளி மிகின் வலி இல்லை” என்ற அடிகள் இடம்பெற்ற நூல் எது?

A) குறுந்தொகை B) தனிப்பாடல் C) புறநானூறு D) சிலப்பதிகாரம்

E) விடை தெரியவில்லை

136. மூன்று வகையான சங்குகளுள் அல்லாதது எது?

A) வெண் சங்கு B) வலம்புரி சங்கு C) சலஞ்சலம் D) பாஞ்சசண்யம்

E) விடை தெரியவில்லை

137. “ஞாயிறு, திங்கள் நெஞ்சம் போன்ற அஃறிணைப் பொருள்கள் சொல்லுந போலவும் கேட்குந போலவும் சொல்லியாங்கு அமையும்” என்று எழுதும் திறத்தைக் குறிப்பிட்டவர் யார்?

A) இளங்கோவடிகள் B) ஐயூர் முடவனார் C) தண்டு D) தொல்காப்பியர்

E) விடை தெரியவில்லை

138. கீழ்கண்ட கூற்றுகளைக் காண்க (முல்லைப்பாட்டு0

1) பத்துப்பாட்டு நூல்களுள் ஒன்று.

2) 103 அடிகளைக் கொண்டது.

3) முல்லைப்பாட்டு அகவற்பாவால் இயற்றப்பட்டது.

A) அனைத்தும் சரி B) 1 மட்டும் தவறு C) 2 மட்டும் தவறு D) 3 மட்டும் தவறு

E) விடை தெரியவில்லை

139. “எறும்புந் தன் கையால் எண் சாண்” - இது யாருடைய கூற்று?

A) பழமொழி B) முதுமொழி C) ஔவை D) திருமூலர் E) விடை தெரியவில்லை

140. பொருத்துக.

a. நல் - 1. பதிற்றுப்பத்து

b. நல்ல - 2. குறுந்தொகை

c. ஒத்த - 3. பரிபாடல்

d. ஓங்கு - 4. நற்றிணை

A) 2 1 3 4 B) 3 2 1 4 C) 4 2 1 3 D) 2 4 3 1 E) விடை தெரியவில்லை

141. “பண்என்னாம் பாடற்கியை பின்றேல்; கண்என்னாம்
கண்ணோட்டம் இல்லாத கண்” - இக்குறளில் பயின்று வந்துள்ள அணி யாது?

A) உவமையணி B) எடுத்துக்காட்டு உவமையணி C) இல்பொருள் உவமையணி

D) பிறிதுமொழிதல் அணி E) விடை தெரியவில்லை

142. பெருமாள் திருமொழியில் மொத்தம் எத்தனை பாடல்கள் உள்ளன?

A) 97 B) 100 C) 102 D) 105 E) விடை தெரியவில்லை

143. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) நீரற வறியாக் கரகத்து என்னும் குறுந்தொகைப் பாடலில் கரகம் என்ற சொல் இடம் பெற்றுள்ளது.

2) சிலப்பதிகாரத்தில் மாதவி ஆடிய பதினொரு வகை ஆடல்களில் குடக்கூத்து என்ற ஆடலும் குறிப்பிடப்படுகிறது.

A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

144. குலசேகர ஆழ்வார் வடமொழியில் எழுதிய நூலின் பெயர்?

A) பெருமாள் திருமொழி B) முகுந்தமாலை C) திருவாய்மொழி D) A & B

E) விடை தெரியவில்லை

145. திருவாசகத்திலுள்ள பாடல்களின் எண்ணிக்கை?

A) 568 B) 658 C) 856 D) 685 E) விடை தெரியவில்லை

146. பொருந்தாததைத் தேர்வு செய்க.

A) மாண்டார் - மாண்புடைய சான்றோர்

B) செறு - நெற்கதிர்

C) துகிர் - பவளம்

D) யாணர் - புதுவருவாய்

E) விடை தெரியவில்லை

147. கம்பர் பற்றிய கூற்றில் சரியானதைத் தேர்வு செய்க.

A) இதில் 8 கண்டங்கள் உள்ளன.

B) கம்பரை ஆதரித்தவர் - 2ம் குலோத்துங்கன்

C) பிறந்த ஊர் - திருவாதவூர்

D) எதுவுமில்லை

E) விடை தெரியவில்லை

148. உலகம், உயிர், கடவுள் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டும் காவியம் தான் பெரியபுராணம் என்றவர் யார்?

A) மகாவித்துவான் மீனாட்சி சுந்தரனார் B) சேக்கிழார் C) திரு.வி.க D) பெரியார்

E) விடை தெரியவில்லை

149. பொருத்துக.

a. வைதருப்பம் - 1. சித்திரக்கவி

b. கௌடம் - 2. மதுரகவி

c. பாஞ்சாலம் - 3. வித்தாரக்கவி

d. மாகதம் - 4. ஆசுகவி

A) 1 2 3 4 B) 4 2 3 1 C) 4 2 1 3 D) 3 1 2 4 E) விடை தெரியவில்லை

150. “நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்” எனப்பாடியவர் யார்?

A) அப்பர் B) சுந்தரர் C) தாயுமானவர் D) மாணிக்கவாசகர் E) விடை தெரியவில்லை

151. பொருத்துக.

a. பணை - 1. செல்வம்

b. நிதி - 2. துன்பம்

c. இடர் - 3. மூங்கில்

d. கவிகை - 4. குடை

A) 1 2 3 4 B) 3 1 2 4 C) 4 3 2 1 D) 2 3 1 4 E) விடை தெரியவில்லை

152. ஆண்டாள் பாடிய திருப்பாவையை வேதம் அனைத்திற்கும் வித்து எனக் கூறியவர் யார்?

A) நாதமுனி B) பூதத்தாழ்வார் C) இராமானுஜர் D) பாரதியார்

E) விடை தெரியவில்லை

153. நாலாயிர திவ்ய பிரபந்தத்தில் நம்மாழ்வார் பாடிய பாடல் எது?

A) திருக்கோவை B) திருவாய்மொழி C) பெருமாள் திருமொழி D) திருப்பாவை

E) விடை தெரியவில்லை

154. குலசேகர ஆழ்வாரின் காலம்

A) கி.பி 9-ம் நூற்றாண்டு B) கி.பி. 8-ம் நூற்றாண்டு C) கி.பி. 7-ம் நூற்றாண்டு

D) கி.பி. 10-ம் நூற்றாண்டு E) விடை தெரியவில்லை

155. "ஓவிய விதானத்து உரைபெறு நித்திலத்து

மாலைத்தாமம் வளையுடன் நாற்றி" என்னும் அடிகள் இடம்பெற்ற நூல் எது?

A) குறுந்தொகை B) சிலப்பதிகாரம் C) நற்றிணை D) சிறுபாணாற்றுப்படை

E) விடை தெரியவில்லை

156. தொல்காப்பியம் முழுமைக்கும் உரை எழுதிய உரையாசிரியர் யார்?

A) சேனவரையர் B) நச்சினார்க்கினியர் C) இளம்பூரணர் D) சி.வை. தாமோதரனார்

E) விடை தெரியவில்லை

157. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) இரட்சணிய யாத்திரிகம் ஆதி பருவம், குமார பருவம், நிதான பருவம், ஆரணிய பருவம், இரட்சணிய பருவம் ஆகிய ஐந்து பருவங்களைக் கொண்டது.

2) இரட்சணிய சரித படலம் இக்காப்பியத்தின் ஆதி பருவத்தில் அமைந்துள்ளது.

A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

158. இவர் ஒரு தமிழ்த்தேனீ?

A) பாரதியார் B) தேவநேயப் பாவணர் C) சுரதா D) மயிலை சீனி. வேங்கடசாமி

E) விடை தெரியவில்லை

159. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) தொல்காப்பியம் கூறும் மெய்ப்பாடுகள் எட்டு.

2) எண்வகை மெய்ப்பாடுகளுள் ஒன்று வெகுளி.

A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

160. கீழ்க்கண்டவற்றில் சரியான முறையில் பொருந்திய தொடரைத் தேர்க.

A) இன்னாது உற்ற அறனில் கூற்றே! B) உற்ற அறனில் இன்னாது கூற்றே!

C) அறனில் உற்ற இன்னாது கூற்றே! D) இன்னாது அறனில் உற்ற கூற்றே!

E) விடை தெரியவில்லை

161. நட்டோர் உவப்ப நடைப் பரிகாரம் முட்டாது கொடுப்பவன் யார்?

A) அதிகன் B) ஓரி C) நல்லியக்கோடான் D) நள்ளி E) விடை தெரியவில்லை

162. "என் பொய்யான உலகப்பற்று அழிந்தது; அளவற்ற காலம் நான் மேற்கொண்டிருந்த தவம் பலித்தது; என் பிறவி ஒழிந்தது" எனக் கூறியது யார்?

A) சடாயு B) சவரி C) இலக்குவன் D) சுக்ரீவன் E) விடை தெரியவில்லை

163. தலைக்கோல் என்பது

A) சாம்புநாதம் என்னும் உயர்ந்த வகை பொன்
B) ஓவியம் தீட்டப்பட்ட பந்தல்
C) நாடக கணிகையர் பெறும் பட்டம்
D) கோல்களில் முதன்மையானது மூங்கில் கோல்
E) விடை தெரியவில்லை

164. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே எனத் தொடங்கும் பாடல் புறநானூற்றின் 184 வது பாடல் ஆகும்.
2) புறநானூறு 1894 ஆம் ஆண்டு உ.வே.சா அவர்களால் அச்சேற்றம் செய்யப்பட்டது.
3) ஜார்ஜ் எல் ஹார்ட் 1999 ஆம் ஆண்டு ஆங்கிலத்தின் மொழி பெயர்த்துள்ளார்.
4) 'காய் நெல் அறுத்துக் கவளம் கொளினே" என்னும் பாடல் பிசிராந்தையருடையது.

A) அனைத்தும் சரி B) 1 மட்டும் தவறு C) 2 மட்டும் தவறு D) 3 மட்டும் தவறு
E) விடை தெரியவில்லை

165. "சினம்என்னும் சேர்ந்தாரைக் கொல்லி இனம்என்னும்
ஏமப் புணையைச் சுடும்.

A) ஏகதேச உருவக அணி B) உவமை அணி C) இயல்பு நவிற்சி அணி
D) எடுத்துக்காட்டு உவமை அணி E) விடை தெரியவில்லை

166. "சொற்சங்கமாகச் சுவைமிகுந்த கவிகூட்டி" என்ற பாடல் வரிகளை எழுதியவர்

A) கண்ணதாசன் B) பாரதிதாசன் C) கவிமணி D) பாரதியார்
E) விடை தெரியவில்லை

167. "எத்திசைச் செலினும், அத்திசைச் சோறே" என்ற கூற்று யாரிடம் கூறப்பட்டது.

A) நெடுமான் அஞ்சி B) வாயில் காப்போன் C) அதியமான் D) ஔவையார்
E) விடை தெரியவில்லை

168. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) திருநெல்வேலியில் இருந்து வெளிவந்த 'நற்போதகம்' எனும் ஆன்மீக மாத இதழில் இரட்சணிய யாத்திரிகம் பதின்மூன்று மாதங்கள் தொடராக வெளிவந்தது.
2) இரட்சணிய யாத்திரிகம், 1894 ஆம் ஆண்டு மே திங்களில் முதல் பதிப்பாக வெளியிடப்பட்டது.

A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு
E) விடை தெரியவில்லை

169. "மஞ்சள் குளிப்பாட்டி மையிட்டு முப்பாலும்
மிஞ்சப் புகட்ட மிகவளர்ந்தாய்" எனக் கூறும் நூல்?

A) கிள்ளை விடு தூது B) தென்றல் விடு தூது C) தமிழ்விடு தூது D) நெஞ்சுவிடு தூது
E) விடை தெரியவில்லை

170. மயிலை.சீனி. வேங்கடசாமியின் "தமிழக வரலாற்றை" மீட்டுருவாக்கும் முயற்சிக்கு சரியான சான்றாக விளங்கும் நூல்?

A) தமிழ்நாட்டு வரலாறு B) சாசனச் செய்யுள் மஞ்சரி C) 19-ம் நூற்றாண்டுத் தமிழ்

D) மறைந்து போல தமிழ்நூல்கள் E) விடை தெரியவில்லை

171. "கவுள்" என்பதன் பொருள்

A) கோல் B) கடவுள் C) தனிமை D) கன்னம் E) விடை தெரியவில்லை

172. "சிறுபாணாற்றுப்படையின் ஆசிரியர் யார்?

A) கடியலூர் உருத்திரங்கண்ணனார் B) முடத்தாமக் கண்ணியார் C) நப்பூதனார்

D) நல்லூர் நத்தத்தனார் E) விடை தெரியவில்லை

173. "கூடிநின்று இசைத்தது ஆமந்திரிகை" என்ற பாடலில் பயின்று வந்துள்ள பாவகை?

A) வஞ்சிப்பா B) வெண்பா C) ஆசிரியப்பா D) கலிப்பா E) விடை தெரியவில்லை

174. நாண்மீன் என்பதைப் பிரித்து எழுதுக.

A) நாள் + மீன் B) நா + மீன் C) நாண் + மீன் D) நாம் + மீன்

E) விடை தெரியவில்லை

175. ஏழ் ஆண்டு இயற்றிஓர் ஈராறு ஆண்டில் சூழ்சுழல் மன்னற்குக் காட்டல் ................ இத்தொடர்களில் வெளிப்படும் செய்திகள்

1) மாதவி ஏழு ஆண்டுகள் வரை நாட்டியம் பயின்றாள்.

2) ஈராறு வயதில் அரங்கேற்றம் செய்ய விரும்பினாள்.

A) 1 சரி 2 தவறு B) 1 தவறு 2 சரி C) 1, 2 தவறு D) 1, 2 சரி

E) விடை தெரியவில்லை

176. பொருத்துக.

a. பொதினி - 1. பேகன்

b. ஊட்டி - 2. நளிமலை நாமன்

c. பொதியமலை - 3. ஆய் அண்டிரன்

d. மலாடு - 4. மலையமான் திருமுடிக்காரி

A) 1 2 3 4 B) 2 1 4 3 C) 3 2 1 4 D) 4 2 1 3 E) விடை தெரியவில்லை

177. எளியது, அரியது என்பன

A) தீயினத்தின் துணை - நல்லினத்தின் துணை B) சொல்வது - சொல்லியபடி

C) சிறுமை பல செய்வது - பகைவர் தொடர்பு D) மெய்ப்பொருள் காண்பது - உருவுகண்டு எள்ளாதது

E) விடை தெரியவில்லை

178. ஓர் அரசன் ஒரு நாளை எவ்வாறு ஒதுக்கி பணியாற்ற வேண்டும் என்பதற்கான அட்டவணையை திருவள்ளுவர் எந்த அதிகாரத்தில் குறிப்பிடுகிறார்?

A) இறைமாட்சி B) மடியின்மை C) நாடு D) வெ∴காமை E) விடை தெரியவில்லை

179. பொருள் தருக. "மா"

A) விலங்கு B) மழை C) வெள்ளம் D) எலும்பு E) விடை தெரியவில்லை

180. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) மேடையின் இருபுறத்திலிருந்தும் நடுவில் ஒன்றோடு ஒன்று பொருந்துமாறு அமைக்கப்படுவது பொருமுகத்திரை.

2) மேடையின் மேலிருந்து வேண்டும் போது கீழே இறக்கும் வகையில் அமைக்கப்படுவது கரந்துவரல் திரை.

A) 1, 2 சரி B) 1 மட்டும் சரி C) 2 மட்டும் சரி D) 1, 2 தவறு

E) விடை தெரியவில்லை

181. "போற்றித் திரு அகவல்" என்னும் நூலின் ஆசிரியர் யார்?

A) கிறித்துவக் கம்பர் B) எச்.ஏ. கிருட்டிணப்பிள்ளை C) சுகந்தி சுப்பிரமணியன்

D) A & B E) விடை தெரியவில்லை

182. 'செறு' என்பதன் பொருள்?

A) பனையோலைப் பெட்டி B) வயல் C) விதை D) வரி E) விடை தெரியவில்லை

183. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க. (திருமூலர்)

1) அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்.

2) பதினெண் சித்தர்களுள் ஒருவர்.

3) திருமந்திரம் மூவாயிரம் பாடல்களைக் கொண்டது.

4) திருமந்திரத்தை தமிழ் மூவாயிரம் என்றும் கூறுவர்.

A) 4 மட்டும் தவறு B) 1 மட்டும் தவறு C) 3 மட்டும் தவறு D) அனைத்தும் சரி

E) விடை தெரியவில்லை

184. கடல்ஓடா கால்வல் நெடுந்தேர் கடல்ஓடும்

நாவாயும் ஓடா நிலத்து - என்னும் குறளில் பயின்று வந்துள்ள அணி?

A) பிறிது மொழிதல் அணி B) வேற்றுமை அணி C) இல்பொருள் உவமையணி

D) வஞ்சப்புகழ்ச்சி அணி E) விடை தெரியவில்லை

185. "கோட்சுறா எறிந்தெனச் சுருங்கிய நரம்பின்

முடிமுதிர் பரதவர்" என்னும் பாடல்வரி இடம்பெற்ற நூல் எது?

A) பதிற்றுப்பத்து B) நற்றிணை C) கார்நாற்பது D) தொல்காப்பியம்

E) விடை தெரியவில்லை

186. பொருந்தாததைத் தேர்க.

A) நாமநீர் - கருணை B) கொங்கு - மகரந்தம் C) திகிரி - ஆணைச்சக்கரம்

D) மேரு - இமயமலை E) விடை தெரியவில்லை

187. இறைமாட்சி என்பது

A) இறைவனை பெருமையாகக் கூறுவது

B) நண்பனின் குணங்களை பெருமையாகக் கூறுவது

C) அரசுக்குரிய பெருமை குணங்களைக் கூறுவது

D) ஆசிரியரின் குணங்களை பெருமையாகக் கூறுவது

E) விடை தெரியவில்லை

188. கீழ்க்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) உவமைகளைப் பயன்படுத்தி கவிதை எழுதுவதில் வல்லவா் காளமேகப் புலவா்.

2) ஆற்றுப்படை நூல்கள் ஐந்து.

3) ஆற்றுப்படை நூல்களுள் ஒன்று மலைபடுகடாம்.

4) பட்டினப்பாலையை இயற்றியவா் நப்பூதனாா்.

A) அனைத்தும் சரி B) 3 மட்டும் தவறு C) 1, 3, 4 தவறு 2 சரி

D) 1, 4 தவறு 2, 3 சரி E) விடை தெரியவில்லை

189. "பொன்னொடு வந்து கறியொடு பெயரும்" என்னும் செய்யுளடி இடம்பெற்ற நூல் எது?

A) அகநானூறு B) 2 மட்டும் தவறு C) 3 மட்டும் தவறு D) குறுந்தொகை

E) விடை தெரியவில்லை

190. கீழ்கண்ட கூற்றுகளைக் காண்க.

1) ஆசாரக்கோவையின் ஆசிரியா் பெருவாயின் முள்ளியாா்.

2) ஆசாரக்கோவை என்பதற்கு நல்ஒழுக்கங்களின் தொகுப்பு என்பது பொருள.

3) ஆசாரக்கோவை பதினெண் கீழ்கணக்கு நூல்களுள் ஒன்று.

4) பெருவாயின் முள்ளியாா் பிறந்த ஊா் கயத்தூா்.

A) 1, 4 சரி 2, 3 தவறு B) 1, 3, 4 சரி 2 தவறு C) 1, 2, 3 சரி 4 தவறு

D) அனைத்தும் சரி E) விடை தெரியவில்லை

191. நன்னூற்புலவன் என்று யாா் யாரை பாராட்டினாா்?

A) சாத்தனாா் இளங்கோவடிகளை B) இளங்கோவடிகள் சாத்தனாரை

C) இளங்கோவடிகள் சாத்தனாரை D) அறவணடிகள் இளங்கோவடிகளை

E) விடை தெரியவில்லை

192. குணம்நாடி குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல் - இக்குறட்பா அமைந்துள்ள அதிகாரம்?

A) வினைத்தூய்மை B) தீவினை அச்சம் C) தெரிந்து தெளிதல் D) ஒற்றாடல்

E) விடை தெரியவில்லை

193. பொருத்துக.

a. கொய்யாக்கனி - 1. தேசிக விநாயகனாா்

b. குக்கூ - 2. சுரதா

c. தேன்மழை - 3. பாரதியாா்

d. ஆசிய ஜோதி - 4. பெருஞ்சித்திரனாா்

e. குயில் பாட்டு - 5. மீ.ரா

A) 4 5 3 2 1 B) 5 4 3 1 2 C) 2 5 4 3 1 D) 4 5 2 1 3

E) விடை தெரியவில்லை

194. சரியாக பொருந்தியதைத் தோ்வு செய்க.

1. மடப்பிடி - பாஞ்சாலி

2. துய்ப்பேம் - கொடுப்போம்

3. கிள்ளை - கிளி
4. பனவன் - புலவர்
5. மருப்பு - தந்தம்

A) 2, 3, 4 B) 1, 3, 4, 5 C) 1, 3, 5 D) 1, 2, 3, 5 E) விடை தெரியவில்லை

195. மதுரை பதிற்றுப்பத்தந்தாதி நூலின் ஆசிரியர்?

A) அந்தககவிவீரராகவர் B) பரஞ்சோதி முனிவர் C) மதுரகவி பாஸ்கரதாஸ் D) நக்கீரர்
E) விடை தெரியவில்லை

196. ஈரோடு தமிழன்பனின் எந்தக் கவிதை நூலுக்கு 2004 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாதெமி விருது வழங்கப்பட்டது?

A) தமிழோவியம் B) வணக்கம் வள்ளுவ C) வாழும் வள்ளுவ D) தமிழன்பன் கவிதைகள்
E) விடை தெரியவில்லை

197. நிலமும் மரமும் உயிர்கள் நோயின்றி வாழவேண்டும் என்னும் நோக்கில் வளர்கின்றன என்று கூறியவர்

A) திருவள்ளுவர் B) கால்டுவெல் C) வில்லியம் ஜோன்ஸ் D) குமரிலப்பட்டர்
E) விடை தெரியவில்லை

198. இனிமையும் நீர்மையும் தமிழெனல் ஆகும் இவ்வடிகள் இடம்பெற்ற நூல்?

A) மண்டலபுருடர் நிகண்டு B) சூடாமணி நிகண்டு C) திவாகர நிகண்டு
D) பிங்கல நிகண்டு E) விடை தெரியவில்லை

199. உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே - இப்பாடல் வரிகள் இடம்பெற்ற நூல் எது?

A) குறுந்தொகை B) சிலப்பதிகாரம் C) புறநானூறு D) அகநானூறு
E) விடை தெரியவில்லை

200. வலவன் ஏவா வான் ஊர்தி எனும் பாடலடி இடம்பெற்றுள்ள நூல்?

A) குறுந்தொகை B) அகநானூறு C) புறநானூறு D) நற்றிணை E) விடை தெரியவில்லை

| S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans | S.No | Ans |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | D | 41 | D | 81 | D | 121 | C | 161 | D |
| 2 | D | 42 | C | 82 | B | 122 | C | 162 | B |
| 3 | B | 43 | C | 83 | A | 123 | C | 163 | C |
| 4 | B | 44 | B | 84 | C | 124 | A | 164 | A |
| 5 | B | 45 | A | 85 | D | 125 | B | 165 | A |
| 6 | B | 46 | D | 86 | D | 126 | B | 166 | A |
| 7 | D | 47 | A | 87 | D | 127 | D | 167 | B |
| 8 | C | 48 | D | 88 | B | 128 | C | 168 | C |
| 9 | D | 49 | A | 89 | D | 129 | D | 169 | C |
| 10 | B | 50 | C | 90 | C | 130 | A | 170 | A |
| 11 | D | 51 | B | 91 | B | 131 | B | 171 | D |
| 12 | D | 52 | A | 92 | C | 132 | D | 172 | D |
| 13 | D | 53 | C | 93 | C | 133 | D | 173 | C |
| 14 | C | 54 | A | 94 | B | 134 | D | 174 | A |
| 15 | A | 55 | D | 95 | D | 135 | C | 175 | D |
| 16 | D | 56 | A | 96 | C | 136 | B | 176 | A |
| 17 | C | 57 | C | 97 | B | 137 | D | 177 | B |
| 18 | B | 58 | B | 98 | C | 138 | A | 178 | B |
| 19 | C | 59 | B | 99 | A | 139 | C | 179 | A |
| 20 | A | 60 | C | 100 | D | 140 | C | 180 | A |
| 21 | C | 61 | C | 101 | C | 141 | B | 181 | D |
| 22 | A | 62 | D | 102 | B | 142 | D | 182 | B |
| 23 | C | 63 | A | 103 | A | 143 | C | 183 | D |
| 24 | B | 64 | B | 104 | B | 144 | B | 184 | A |
| 25 | C | 65 | C | 105 | A | 145 | B | 185 | B |
| 26 | A | 66 | B | 106 | D | 146 | B | 186 | A |
| 27 | B | 67 | B | 107 | C | 147 | D | 187 | C |
| 28 | B | 68 | C | 108 | C | 148 | C | 188 | D |
| 29 | C | 69 | B | 109 | C | 149 | C | 189 | A |
| 30 | C | 70 | C | 110 | A | 150 | A | 190 | D |
| 31 | A | 71 | C | 111 | C | 151 | B | 191 | C |
| 32 | A | 72 | C | 112 | B | 152 | C | 192 | C |
| 33 | C | 73 | D | 113 | D | 153 | B | 193 | D |
| 34 | B | 74 | B | 114 | D | 154 | A | 194 | C |
| 35 | D | 75 | A | 115 | C | 155 | B | 195 | B |
| 36 | A | 76 | C | 116 | A | 156 | C | 196 | B |
| 37 | A | 77 | B | 117 | A | 157 | B | 197 | C |
| 38 | B | 78 | D | 118 | A | 158 | D | 198 | D |
| 39 | D | 79 | A | 119 | B | 159 | A | 199 | C |
| 40 | B | 80 | C | 120 | A | 160 | A | 200 | C |